பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை 11.12.2020 கதிர் 266

## புதுக்காட்டுச் சந்தியில் விபத்து; ஒருவர் சாவு!

கிளிநொச்சி - புதுக்காட்டுச் சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில், பளை பிரதேசத்தின் புலோப்பளை மேற்கைச் சேர்ந்த 56 வயதான கிருஷ்ணன் நவநீதன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

## அரசியல் கைதிகள் விடுதலை: ஜனாதிபதியே முடிவு எடுப்பார்

### இராஜாங்க அமைச்சர் லொஹறான் ரத்வத்த தெரிவிப்பு



'தமிழ் அரசியல் கைதிகள்' என்று தமிழ் அரசியல்வாதிகள் கூறும் சிறைகளிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் ஆகியோரை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும்.

- இவ்வாறு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹறான் ரத்வத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல்வாதிகள் கூறும் தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில்

## கிழக்கில் முதலாவது கொரோனா மரணம்!

**கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் முதலாவது மரணம் பதிவாகியுள்ளது.**

**அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்திய சுகாதார அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரே கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார். இந்தத் தகவலை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் உறுதிப்படுத்தியுள்ளார்.**

# விரைவில் மாகாண சபைத் தேர்தல்

### பிரதமர் மஹிந்த அதிரடி உத்தரவு



**கொழும்பு, டிசெம்பர் 11**

**மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.**

**தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், பிரதமருக்கும் இடையே இன்று முற்பகல் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

## 'பட்ஜட்' விருந்தில் சம்பந்தன் எம்.பி. தன்னந்தனியே!



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று மாலை நிறைவேற்றப்பட்ட பின்னர், சம்பிரதாய 'பட்ஜட் தேநீர் விருந்து' சபாநாயகர் இல்லத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் பங்கேற்றார்.

வரவு - செலவுத் திட்டம் மீது நேற்று மாலை நடைபெற்ற இறுதி

## வாழைச்சேனை பெரும் ரகளையுடன் நிறைவேறிய வரவு -செலவுத் திட்டம்

வாழைச்சேனை பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்த் தரப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நிலையில் இன்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

வாழைச்சேனை பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இரண்டு சபை உறுப்பினர் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் உள்ள நிலையில் எதிர் தரப்பினர் சபையை நடத்தக் கூடாது என்று சபை மண்டப நுழைவாயிலை மூடி போராட்டம் நடத்தினார்கள்.

## தென்னமரவாடி காணி சுவீகரிப்புக்கு எதிரான இடைக்காலத் தடை நீடிப்பு

திருகோணமலை மாவட்டம் திரியாய், தென்னைமரவாடிப்பகுதியில் தமிழர்களின் காணிகளை புராதனச் சின்னங்கள், மையங்கள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களம் சுவீகரிப்பதற்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் தொடர்ந்தும் நீடித்தது.

நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு இன்று காலை எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவை நீதிபதி விடுத்தார்.

அரசுத் தரப்பில் சிரேஷ்ட சொலிஸிஸ்டர்ஜெனரல் விகும் டி ஆப்ரூவும், மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனும்

## கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகே இந்து ஆலயம் அமைக்க அனுமதி

திருகோணமலை, டிசெ.11

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் இருந்த பகுதியில் கோயில் கட்டுவதற்கு அனுமதிக்க இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் இணக்கம் காணப்பட்டது.

நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில்

## 'கொரோனா'வால் இம்மாதம் 10 நாள்களில் 31 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலை மூலம் நேற்றிரவு வரை 26 ஆயிரத்து 981 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் இதுவரையில் 134 பேர் பலியாகியுள்ளனர். (ஒக்ரோபர் 24 முதல் நேற்று வரை)

மினுவாங்கொட கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொடை கொத்தணி மூலம் 23 ஆயிரத்து

## முல்லைத்தீவு கடலில் அத்துமீறும் இந்திய மீனவரை உடன் தடுக்குக!

### தவறினால் நாமே துரத்தியடிப்போம் முல்லை மீனவர் எச்சரிக்கை விடுப்பு



முல்லைத்தீவு - கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எதிர் வரும் திங்கட்கிழமைக்குள் எடுக்கவேண்டும் என முல்லைத்தீவு மீனவர்கள் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தவறினால் எதிர்வரும் செவ்வாய் (15) அன்று பாரிய போராட்டத்தில் ஈடுபடுகின்றமையுடன், இந்திய மீனவர்களை முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து தாமே துரத்தியடிக்கவேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை அவர்கள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று



## முல்லைத்தீவு கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெள்ளிக்கிழமை தமது கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் துரத்துவதற்காக படகுகளில் கடலுக்குச் செல்லத் தயாராகியிருந்தனர்.

அப்போது அங்கு வருகை தந்த முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடமே மீனவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்-

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைய நாள்களாக இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்திருக்கும் நிலையில், இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்காக முல்லைத்தீவு மீனவர்கள் 25 படகுகளுக்கு மேல் கடலுக்குச் செல்லத் தயாராகியிருந்தனர்.

குறித்த இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்பில் உரிய அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சர், கடற்படையினர் போன்றோருக்குப் பலதடவைகள் தெரியப்படுத்தியிருந்த நிலையில் அவர்களால் இதுதொடர்பில் கவனஞ் செலுத்தப்படவில்லை. இந்நிலையிலேயே நேற்று முல்லைத்தீவு மீனவர்கள் மற்றும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை ஆகியோர் இணைந்து, கடலில் அத்துமீறி நுழைந்து தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுப்பதற்கு கடலுக்குள் செல்வதற்குத் தயாராகியிருந்தனர்.

இந்த நிலையில் இவ்வாறு மீனவர்கள் கடலுக்குச் செல்லவிருக்கின்றமையை அறிந்த முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். கலிஸ்ரன், நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகள் கடற்கரைப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

கடற்கரைப் பகுதிக்கு வருகைதந்த அரச அதிகாரிகள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் மீனவர்களுடன் நீண்டநேரம் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மீனவர்கள் சார்பில் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவ்வாறு எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத்தரத் தவறினால், எதிர்வரும் 15.12.2020 செவ்வாய் அன்று முல்லைத்தீவு மீனவர்களால் பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதுடன், போராட்டத்தைத் தொடர்ந்து மீனவர்கள் கடலுக்குள் சென்று இந்திய மீனவர்களை முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என மீனவர்கள் சார்பில் வருகைதந்த அரச அதிகாரிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்து.

இந் நிலையில் அங்கு வருகைதந்த மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

இது இருநாட்டு மீனவர்களுக்கு இடையில் உள்ள பிரச்சினை. எனவே இப்பிரச்சினைக்கு இராஜதந்திர வழியிலேயே தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மாறாக இரு நாட்டு மீனவர்களும் நேரடியாக மோதிக்கொள்வது மேலும் பிரச்சினைகளை உருவாக்குவதாக அமையும்.

ஆகவே இந்தப் பிரச்சினை தொடர்பில் மாவட்ட செயலர் க.விமலநாதன் ஊடாக வடமாகாண ஆளுநர், கடற்றொழில் அமைச்சர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்தி உரிய தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மீனவர்கள் கடற்கரையிலிருந்து விலகிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'பட்ஜட்' விருந்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாக்கெடுப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அதன் பின்னர் சபாநாயகரின் இல்லத்தில் நடைபெற்ற 'பட்ஜட்' விருந்தில் சம்பந்தன் பங்கேற்றார்.

'பட்ஜட்' விருந்துக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு வந்தது. ஆனால், நாம் வாக்கெடுப்பில் பங்கேற்காத காரணத்தால் அதிலும் கலந்துகொள்ளவில்லை. தலைவர் சம்பந்தன் மட்டும் பங்கேற்றார். அது அவரின் தனிப்பட்ட விருப்பம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## விரைவில் மாகாண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாகத் தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் குறித்து ஆராயுமாறும் பிரதமர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

அதன் காரணமாக இம்முறை மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமைக்கு அமைய நடத்த, எதிர்காலத்தில் தேவையான சட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது எளிதாக அமையும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ஏற்கனவே அது தொடர்பில் சபாநாயகரிடம் தான் கோரிக்கை விடுத்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## அரசியல் கைதிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்ட காரணத்தினாலேயே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள்.

அவர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், வழக்கு விசாரணையை எதிர்கொள்பவர்களுமே தற்போது சிறைகளில் உள்ளனர்.

எனவே, அவர்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்கவேண்டும். அது தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது.

தற்போதைய எம்.பி. பிள்ளையான் (சந்திரகாந்தன்) கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரிலேயே அன்று கைதுசெய்யப்பட்டிருந்தார். ஆனால், அதற்கான சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர் தற்போது விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த நல்லாட்சி அரசில் அரசியல் பழிவாங்கல் காரணமாகவே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், பிள்ளையானின் விடுதலையை உதாரணம் காட்டி தாம் சொல்லும் 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற தமிழ்க் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் வேண்டுகோள் விடுப்பது நியாயமற்றது. அவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்க வேண்டும் - என்றார்.

## புதுக்காட்டுச் சந்தியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர், புதுகாட்டுச்சந்தியில் திரும்பிய வேளை இந்த விபத்துஏற்பட்டுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவரை சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாழைச்சேனை பெரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் திருமதி.ப.லிங்கேஸ்வரன் குறித்த இடத்திற்கு வருகை தந்து உறுப்பினர்களிடம் கலந்துரையாடிய சமயத்தில் சம்பவ இடத்தில் திடீரென மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதன் பிற்பாடு குறித்த இடத்திற்கு வருகை தந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை நடாத்தியதுடன், உள்ளே வருவதற்கு நுழைவாயிலை திறக்குமாறு கோரியதற்கு இணங்க திறக்கப்படவில்லை.

அத்தோடு சபையின் தவிசாளர் சபை மண்டபத்திற்குள் உள்ள தனது அறையில் வெளியே வரதா வண்ணம் இருந்தார். இதனை தொடர்ந்து சபை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோருக்கு இடையில் பல்வேறு காரசாரமான சம்பவங்கள், வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக பொலிஸ் கலகம் அடக்கும் படையினர் குவிக்கப்பட்டு கூடி நின்றவர்களை கலைத்தனர்.

பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சபை உறுப்பினர்கள் சபை மண்டபத்தினுள் இருந்து வெளியில் வந்து சபை மண்டப நுழைவாயிலை உடைத்த நிலையில் வெளியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் மற்றும் கட்சி ஆதரவாளர்களை உள்ளே வரவழைத்ததோடு, தவிசாளரின் அறையினை உடைத்து தவிசாளரையும் வெளியில் சபை உறுப்பினர்கள் கொண்டு வந்தனர்.

அதன்பிற்பாடு எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையை நடாத்த விடாது தடுத்த போது இரண்டு சபை உறுப்பினர்களை தாக்கியவாறு உள்ளே சென்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் பதினொரு பேருடன் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆறு உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் ஓர் உறுப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினர், சுயேச்சைக்குழு (கருணா கட்சி) ஓர் உறுப்பினருமாக பதினொரு பேர் ஆதரவு வழங்கினார்கள்.

அத்தோடு வாழைச்சேனை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் த.யசோதரன், சபை உறுப்பினர் எம்.வாஸ்தீன் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன், ஊடகங்களுக்கு அனுமதி வழங்காத வகையில் இன்று வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## கன்னியா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று இந்த வழக்கு எடுக்கப்பட்டபோதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தப் பகுதியில் கோயில் கட்டுவதற்குத் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், எனினும் அந்த நிலத்தில் கோயில் கட்டும் நிலையத்தைத் தங்கள் தரப்பே காட்டும் என்றும் அரச தரப்பில் முன்னிலையான சிரேஷ்ட சொலிஸிஸ்டர் ஜெனரல் விகும் டி ஆப்ரூ தெரிவித்தார். ஆனால், அதனை மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆட்சேபித்தார்.

அந்தநிலம் எமது கட்சிக்காரருக்குரியது. அவர் எந்த இடத்தில் கோயில் அமையும் என்பதை அரசுத் தரப்புக்குத் தெரிவிப்பார். குறைந்தது மூன்று வித்தியாசமான இடங்களை அவர் பிரேரிப்பார். அவற்றில் எது இணக்கமானது என்பதை வேண்டுமானால் அரசுத் தரப்பு சுட்டிக்காட்டலாம். - என்றார் அவர்.

அந்த இணக்கத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டமையால் அது பற்றிய முடிவை உறுதி செய்வதற்காக வழக்கை பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது மன்று.

கன்னியா வெந்நீரூற்றை தொல்லியல் திணைக்களமே பராமரிக்கவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 'கொரோனா'வால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
922 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 18 ஆயிரத்து 922 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மாத்திரம் 538 பேருக்கு வைரஸ் தொற்றியது.

அதேவேளை, இலங்கையில் நேற்று வரை மொத்தமாக 30 ஆயிரத்து 612 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 22 ஆயிரத்து 260 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் மூவர் உயிரிழந்துள்ளனர். இதன்படி இலங்கையில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 147 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள். நவம்பரில் மாத்திரம் 98 பேர் உயிரிழந்துள்ளனர். டிசெம்பரில் கடந்துள்ள 11 நாள்களில் 31 பேர் பலியாகியுள்ளனர்.

## தென்னமரவாடி காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னிலையாகினர். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

மேற்படி காணிகளில் புராதனச் சின்னங்கள் இருக்குமானால், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளரையும் கூட்டிச் சென்று அதனைக் காட்ட வேண்டும் என்றும் -

அப்படி காட்டப்பட்டால் அந்தப் பகுதியைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கு காணி உரிமையாளர் நடவடிக்கை எடுப்பார் என்றும் -

தெரிவிக்கப்பட்ட யோசனையை ஏற்றுக் கொண்டு அதன்படி செயற்பட நீதிமன்றம் பணித்தது.

அவரை மனுதாரர்கள் தமது காணியில் பயிர்ச்செய்கை செய்வதை தடுக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் தெரிவித்தது. வழக்கு பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெறும் கையால் முழம்போடும் ஐக்கிய தேசியக் கட்சியினர்

**ரணில் விக்கிரமசிங்கவின் விவேகமற்ற தலைமைத்துவத்தினால் இந்த நாட்டின் இரு பெரும் கட்சிகளில் ஒன்றாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சி கருமாரி செய்யும் நிலைக்கு வந்துவிட்டது.**

**கடைசியாகக் குற்றுயிரில் கிடக்கும் அக் கட்சியை மீள உயிர்ப்பிக்கும் வாய்ப்பையும், தனது மருமகன் ருவன் விஜேவர்த்தனவிடமே கட்சியின் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பேன் என்று ஒற்றைக் காலில் நின்று அடம் பிடிப்பதன் மூலம் நாசமாக்கியுள்ளார் ரணில்.**

**இந்த நிலையில் அதன் தலைவர் பதவியை வகிக்கும் ருவன் விஜேவர்த்தன கட்சியின் நிலைமை தெரியாது பிதற்றியிருப்பதைப் பார்க்கும்போது 'சந்திரமுகி' படத்தில் நடிகர் வடிவேலுவைப் பார்த்து ரஜினிகாந்த் நகைச்சுவையாகக் கூறும் வசனம்தான் நினைவுக்கு வருகின்றது.**

***"ஒருத்தனுக்கு எழுந்து நிக்கவே துப்பில்லையாம். இதுல ஒன்பது பொண்டாட்டி கேக்குமாம்"* என்பார் ரஜினி காந்த்.**

***"அரசைக் கைப்பற்றுவதற்கான வலிமையான அரசியல் சக்தியை நிறுவ வேண்டுமானால் எதிர்க்கட்சிக் கூட்டணியை வழி நடத்த வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சிதான்"* என்று ருவன் விஜேவர்த்தனா பகிரங்கமாகக் கூறியிருக்கின்றமையைக் கவனிக்கும் போதுதான் ரஜினிகாந்தின் மேற்படி வசனம்தான் நினைவுக்கு வருகின்றது.**

**கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் கொடுத்த சாட்டையுடன் ஐக்கிய தேசியக் கட்சி துவண்டு, சுருண்டு, அடங்கிப் போய்க் கிடக்கின்றது. சாகக் கிடக்கும் மனிதனுக்கு சேடம் இழுப்பது போன்ற நிலையில் கட்சி தள்ளாடுகின்றது. கட்சியே தப்பிப் பிழைக்குமா எனத் தள்ளாடும்போது, எதிர்க்கட்சிகளின் கூட்டுத் தலைமை வகிப்பது குறித்து அதன் பிரதித்தலைவர் பகிரங்கமாகப் பேசுகின்றமை மிகுந்த நகைப்புக்குரிய விடயம். அதனை ரஜினிகாந்தின் அந்த 'சந்திரமுகி' பட வசனம் மூலம் விமர்சிப்பதில் என்ன தப்பு?**

**கட்சியே உயிர் பிழைக்குமா என்ற சேடம் இழுக்கும் நிலைமை. அதற்குள் தங்கள் கட்சியில்தான் முதிர்ந்த – மூத்த – தலைவர்களைக் கொண்டுள்ளது, அவர்களாலேயே ஒரு பெரிய கூட்டணியை நடத்த முடியும் என்ற சுயதம்பட்டப் பேச்சு வேறு.**

**ஐக்கிய தேசியக் கட்சியின் பழசுகளாகிவிட்ட தலைவர்களையும், கூட்டணியைக் கொண்டு நடத்தும் அவர்களின் சீத்துவத்தையும் கடந்த காலத்தில் நாடு முற்றாகத் தரிசித்துப் பட்டறிந்து விட்டது. அதனால்தான் அந்தக் கட்சியை அப்படி நிராகரித்தார்கள் மக்கள்.**

**இப்போதும், கூட்டணிக்குத் தலைமை தாங்கும் தகுதி தங்களுக்குத்தான் உள்ளது என்று ருவன் விஜேவர்த்தனா வாய்ப்பந்தல் போடுவது ரஜினிகாந்த் கூறுவது போல எந்திரிக்க வக்கிலாதவன் ஏதோ கேட்பது போன்ற நளினப் பேச்சன்றி வேறில்லை.**

**ஆங்காங்கே மாவட்டங்களில் மிச்சகொச்சமாகக் கிடைத்த வாக்குகளால் ஒரு தேசியப் பட்டியல் எம்.பி. பதவிதான் ஐ.தே.கட்சிக்குக் கிடைத்தது. அதற்குக் கூட கடந்த நான்கு மாதங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க இயலாத குத்துவெட்டு நிலைமையில் கட்சி. அதற்குள், எதிரணித் தரப்புக்குத் தலைமை தாங்கும் தகுதி குறித்துப் பேசுவது அபத்தம்.**

**சுதந்திர இலங்கையை அடுத்த ஐம்பது ஆண்டுகள் மாறி, மாறி ஆட்சி செய்த இரு பெரும் கட்சிகளும் – ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் – இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில்தான். உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைதான்.**

**சுதந்திரக் கட்சியின் பெயரில் நாடாளுமன்றத்தில் ஓர் எம்.பி. உள்ளார். அதுவும் வடக்கில் யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள எம்.பி. உள்ளார். தவிரவும், ஆட்சி அமைத்திருக்கும் மொட்டுக் கூட்டணியில் பதினெட்டு வரையான சு.க. எம்.பிக்கள் இடம்பெற்றுள்ளனர்.**

**ஆனால், ஐ.தே. கட்சின் நிலைமையோ மிகமிக மோசம்.**

**பொதுவாகப் பார்த்தல் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்களோடு அண்மைக் காலத்தில் நெருங்கி நின்ற கட்சி என ஐ.தே.கவைக் கூறினாலும் கூட வடக்கு, கிழக்கில் கூட அதனால் குறிப்பிடத்தக்க அளவுக்கு வாக்குகளைத் திரட்ட முடியவில்லை.**

**கொடூர யுத்தத்தையும், பேரிழப்புகளையும் ஈழத் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட – 2004 முதல் 2009 வரை ஆட்சியில் இருந்த – அரசுகள் சு.கவைத் தலைமையாகக் கொண்ட கட்டமைப்புகளே. அத்தகைய பேரிழப்பைத் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து ஓர் எம்.பியை, சு.கவினால் பெற முடிந்தது. ஆனால் தமிழர்களுடன்நெருங்கி ஊடாடிச் செயற்பட்டதாகக் கூறப்பட்ட ஐ.தே.கவால் தமிழர்கள் மத்தியில் இருந்து கூட கணிசமன வாக்குகளைப் பெற முடியவில்லை.**

**தன்னை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அக்கட்சி முன்வராதவரை, வெறும் வாய்ச் சவடால் பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு ஒரு முன்னேற்றமும் அதற்குக் கிட்டப் போவதில்லை என்பது தெளிவு.**

# மஹர சிறைக் கைதிகள் போராட்டம் நியாயமானது

## இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என்கிறார் சஜித்



மஹர சிறைச்சாலையில் கைதிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தக்கூடியது எனச் சிறைச்சாலை கலவரம் குறித்து வெளியாகியுள்ள இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைச்சாலையில் உள்வாங்கப்படக்கூடிய கைதிகளை விட மூன்று மடங்கு அதிகமானவர்கள் அங்கு காணப்பட்டனர் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தங்களைப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள கைதிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறும், தரமான உணவுகளை வழங்குமாறும் கைதிகள் வேண்டுகோள் விடுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் காணப்பட்ட நெரிசல் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தக்கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹர சிறையில் மனித உரிமை மீறப்பட்டது என இடைக்கால விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் – என்றார்.

## கைதிகளின் போராட்டம் வன்முறையாக மாறியதற்கான காரணம் வெளியானது!

கொழும்பு, நவ.11

மஹர சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதிலிருந்து தப்பிக்க கைதிகள் ஆரம்பித்த போராட்டத்தை, பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்கள் சிலரே வன்முறையாக மாற்றியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஐந்து பேர் கொண்ட குழுவே இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கையை நீதியமைச்சர் நாடாளுமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

சில கும்பல் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பழிவாங்க முயன்றமையால், கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்முறைக்குத் திரும்பியுள்ளது.

மேலும், கைதிகள் யாரும் துப்பாக்கிகள் ஏதும் வைத்திருக்கவில்லை. அதிகாரிகள் மற்றும் நிலைமையைத் தணிக்க வந்தவர்கள் மாத்திரமே துப்பாக்கிகளை வைத்திருந்தனர்.

இருப்பினும், வாயிலுக்கு அருகில் மரக் கட்டைகள், இரும்புக் கம்பிகள் மற்றும் கற்கள் இருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை சில கைதிகள், பல வகையான மாத்திரைகளைத் திருடி அவற்றை உட்கொண்டுள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சிறை வளாகத்தில் இருந்த முக்கியமான ஆவணங்களைக் கைதிகள் எரித்துள்ளனர்.

அத்துடன் விளக்கமறியலில் கைதிகள் வைக்கப்பட்டுள்ள பகுதி தவிர, வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களும் சாம்பாராக எரிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று நேர்மறையாகக் கண்டறியப்பட்டவர்களைப் பிரிக்கவும், மற்றையவர்களை சுய தனிமைப்படுத்தலில் அந்தந்த வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிக்கையில் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது.

## ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை இலங்கையர்கள் காணும் வாய்ப்பு!

ஜெமினிட்ஸ் விண்கல் பொழிவை எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கையர்கள் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்:–

எதிர்வரும் 13 –14 ஆம் திகதிகளில் வருடாந்திர விண்கல் பொழிவு நிகழ்கிறது. அதிகாலை வரை நிலவு ஒளி இல்லாததால் இந்த ஆண்டு அதிக விண்கற்களைக் காணலாம்.

நகர ஒளி மாசுபாடு இல்லாமல் வானம் தெளிவாகவும், இருட்டாகவும் இருந்தால், ஒரு மணி நேரத்திற்கு 120 விண்கற்கள் அல்லது நிமிடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு விண்கற்கள் காணப்படலாம்.

இரவு 9 மணிக்குப் பிறகு கிழக்கு நோக்கி விண்கற்களை இலங்கையர்கள் காணலாம். 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை , நள்ளிரவில் மற்றும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சூரிய உதயத்துக்கு முன் விண்கல் பொழிவை காண முடியும்.



14 ஆம் திகதி திங்களன்று அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சூரிய உதயத்துக்கு முந்தைய இருண்ட நேரங்களில் இதைப் பார்ப்பதற்கான சிறந்த நேரம் இருக்கும். ஏனெனில் மழையின் கதிரியக்க புள்ளி வானத்தில் மிக அதிகமாக உள்ளது மற்றும் உச்சச் செயல்பாடு ஏற்படுகிறது.

இந்த விண்கல் மழை வெள்ளை, மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் சிவப்பு போன்ற பல வண்ணங்களில் காணப்படும் விளக்குகளின் தடத்துடன் பல வண்ண காட்சிக்கு பிரபலமானது.

இந்த நட்சத்திரங்கள் ஜெமினி என்ற நட்சத்திர விண்மீன் திசையிலிருந்து வருவதாகத் தெரிகிறது, எனவே இதற்கு ஜெமினிட் என்று பெயரிடப்பட்டுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவுக்கு சிகிச்சைபெறும் அரச ஊழியருக்கு அக்ரஹார!

கொரோனா அச்சம் காரணமாக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் அரச ஊழியர்களுக்கு பணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அக்ரஹார காப்புறுதியில் இவர்களுக்கு நாளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 10 நாள்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாக கூறப்பட்டுள்ளது.

அதேபோல் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் அரச ஊழியர்களுக்கு 7 லட்சம் ரூபா பணம் வழங்க தீர்மானிக் கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார் கமல்!



மக்கள் நீதி மய்யம் நிறுவுனர் கமல்ஹாசன், 4 நாள் தேர்தல் பிரசாரத்தை நாளை மறுதினம் 13 ஆம் திகதி தொடங்குகிறார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் துணைத்தலைவர் டாக்டர் மகேந்திரன் வெளியிட்டு உள்ள அறிக்கையில், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வருகிற16 ஆம் தேதி வரை, கமல்ஹாசன் பிரசாரம் செய்வார் என தெரிவித்துள்ளார்.

கூட்டங்களில் பங்கேற்கும் தொண்டர்கள், கொரோனாத் தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று மகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கார்பைன் ரக தானியங்கித் துப்பாக்கி இந்திய உள்நாட்டுத் தயாரிப்பு வெற்றி




இந்திய பாதுகாப்பு படையினரின் உபயோகத்துக்காக, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கார்பைன் ரக தானியங்கி துப்பாக்கி வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

5.56 + 30 எம்.எம். அளவுள்ள குண்டுகளைப் பயன்படுத்தும் வகையில் அந்த துப்பாக்கியை டி.ஆர்.டி.ஓ. (பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்) வடிவமைத்துள்ளது. துப்பாக்கி கான்பூர் ஆயுத தொழிற்சாலையிலும், குண்டுகள் புனே வெடிமருந்து தொழிற்சாலையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதன் இறுதி கட்டப் பரிசோதனை கடந்த 7 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது. இதையடுத்து டி.ஆர்.டி.ஓ. குழுவினருக்கு அதன் தலைவர் சதீஷ் ரெட்டி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

3 கிலோ எடைகொண்ட துப்பாக்கி, 100 மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் உள்ள இலக்கை சுடும் திறன் கொண்டதாகும். கோடைகாலத்தில் மிக அதிக வெப்பநிலையிலும், குளிர்காலத்தில் மிக உயரமான மலைப் பகுதியிலும் சோதித்ததில் சுடும் திறன் மிகத் துல்லியமாக இருந்ததாக கூறப்படுகிறது.

# இந்திய விமானங்கள் தாக்கலாம்; எச்சரிக்கையால் பதற்றத்தில் பாக்.



பாகிஸ்தானில் இந்திய விமானங்கள் மீண்டும் துல்லியத் தாக்குதல் நடத்தலாம் என்ற உளவுத்துறை எச்சரிக்கையால் அந்நாடு பதற்ற நிலையில் காணப்படுகிறது.

பாகிஸ்தான் போர் விமானங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டு பாகிஸ்தான் எல்லைக்குள் சென்று தீவிரவாத முகாம்களை 21 நிமிடங்களில் அழித்து இந்தியாவின் போர் விமானங்கள் புல்வாமா தாக்குதலுக்கு பதிலடி கொடுத்தன.

தீவிரவாத முகாம்கள் மீது ஆயிரம் கிலோ எடை கொண்ட வெடிப்பொருள்களை வீசி முகாம்களை அழித்து இந்திய விமானங்கள் வெற்றிகரமாக திரும்பி வந்தன. இது போன்றதொரு துல்லியத் தாக்குதல் மீண்டும் நடத்தப்படலாம் என்ற கவலையில் பாகிஸ்தான் விமானப்படை எதிர்த்தாக்குதலுக்கு தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 12.12.2020 | சனிக்கிழமை |
| --- | --- |
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

# சந்தேகத்துக்குப் பலியான தம்பதியர் இரு குழந்தைகள் தவிக்கும் பரிதாபம்



## காஞ்சிபுரத்தில் நிகழ்ந்த சம்பவம்

கணவர் மீது சந்தேகத்தால் மனைவி தற்கொலை செய்து கொள்ள, இதனால், கணவரும் தன் உயிரை மாய்த்துக் கொள்ள, இரண்டு பெண் குழந்தைகள் அநாதரவான சம்பவம் காஞ்சிபுரம் அருகே நிகழ்ந்துள்ளது.

காஞ்சிபுரம் அருகேயுள்ள விநாயகபுரம் குப்பம்மாள் நகரில் கதிர்வேல் – மணிமேகலை தம்பதி வசித்துவந்தனர். இந்ததம்பதிக்கு முத்து அட்சயா(வயது8) நிவாசினி(வயது4) என்று இரு மகள்களும் உள்ளனர்.

கதிர்வேல் அதே பகுதியில் டைல்ஸ் கடை நடத்தி வருகிறார் . கணவரின் நடத்தையில் சந்தேகம் அடைந்து மணிமேகலை அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார்.நேற்றிரவு கணவன் – மனைவிக்கிடையே தகராறு நடந்துள்ளது. இதனால், மனமுடைந்த மணிமேகலை கணவர் , மகள்கள் உறங்கிய பிறகு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உறங்கிக் கொண்டிருந்த கதிர்வேல் இரவில் விழித்து பார்த்த போது, மணி மேகலை இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். இதனால், மனமுடைந்து போன கதிர்வேலும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். காலையில் மகள்கள் எழுந்து பார்த்தபோது தாய் – தந்தை இறந்தது கிடப்பதை கண்டு அலறி துடித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து பாலுசெட்டி சத்திரம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து பொலிஸார் விரைந்து வந்து கணவன் மனைவி இருவரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கணவன் – மனைவி இருவரும் தற்கொலை செய்து கொள்ள குழந்தைகள் அநாதரவாக நிற்பது கண்டு உறவினர்கள் மனம் கலங்கி நிற்கின்றனர்.

# பிளாஸ்மோடியம் ஓவேல் எனும் புதிய ரக மலேரியா கேரளத்தில்!

## கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம்

பிளாஸ்மோடியம் ஓவேல் என்னும்புதியவகைமலேரியா நோய் கேரளத்தில் கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாநில நலவாழ்வுத்துறை அமைச்சர் சைலஜா தெரிவித்துள்ளார்.

இதுபற்றித் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர், சூடானில் இருந்து வந்த இராணுவ வீரர் கண்ணூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவருக்குப் பிளாஸ்மோடியம் ஓவேல் என்னும் புதிய வகை மலேரியா நோய் உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு நிபா வைரஸ் கேரளத்தின் கோழிக்கோட்டில் கண்டறியப்பட்டதும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவில் இருந்து கேரளத்துக்கு வந்த மாணவரிடம் இந்தியாவில் முதல் கொரோனா தொற்று கண்டறியப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

# ராஜஸ்தான் மருத்துவமனை ஒன்றில் ஒரு நாளில் பிறந்த 9 சிசுக்கள் சாவு

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் ஜே.கே.லோன் மருத்துவமனையில் புதிதாகப் பிறந்த 9 குழந்தைகள் கடந்த 24 மணி நேரத்தில் அடுத்தடுத்து இறந்துவிட்டமையால் பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர்.

மூன்று குழந்தைகள் இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டன எனவும் மற்ற குழந்தைகள் நோய் முற்றிய நிலையில் வேறு மருத்துவமனைகளில் இருந்து மாற்றி விடப்பட்டன எனவும் மருத்துவமனை நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த மருத்துவமனை நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. எந்த ஒரு குழந்தையும் கவனக்குறைவால் பலியாகக் கூடாது என்றும் மருத்துவமனைகள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டிருப்பதாக அம்மாநில சுகாதார அமைச்சர் ரகு சர்மா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# டைம்ஸ் பத்திரிகையின் 2020 ஆண்டுக்கான சிறந்த நபராக பைடனும், கமலாவும் தெரிவு!



டைம்ஸ் பத்திரிகையின் 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த நபராக அமெரிக்க அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனும், துணை அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள கமலா ஹாரிஸும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1927 ஆம் ஆண்டு முதல் செய்திகளில் அதிகம் பேசப்படுவோரைத் தேர்வு செய்து, டைம்ஸ் பத்திரிகை விருது அளிக்கிறது. அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஜோ பைடனும், துணை அதிபர் தேர்தலில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட கமலா ஹாரிஸும் வெற்றி பெற்றனர்.

விரைவில் 2 பேரும் பதவியேற்கவுள்ள நிலையில், சிறந்த நபராக 2 பேரும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர் என டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## சீனாவில் 1000 ஆண்டுகளாக நடைபெறுத் தீ நடைப்பயிற்சி!



சீனாவின் கிழக்கு மாகாணமான சைஜிங்கில் தீ நடைபயிற்சி விழா ஆயிரம் ஆண்டுகளாக பாரம்பரியமான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த விழாவில் தீக்கங்குகள் ஓர் இடத்தில் குவியலாகக் குவிக்கப்பட்டிருக்கும். அந்த தீக்கங்குகளின் மேல் நடந்து செல்பவர்கள் தங்கள் வீட்டுக்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வருவார்கள் என சீனர்கள் நம்புகின்றனர்.

இந்த பழைமை மாறாத பாரம்பரிய மிக்க விழாவானது கடந்த 200 5ஆம் ஆண்டு முதல் இந்த மாகாணத்தில் கலாசார பாரம்பரியமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## போலந்திலும் மர்ம தூண்!

அமெரிக்கா, பிரிட்டன், ருமேனியா, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளைத் தொடர்ந்து போலந்திலும் மர்ம உலோகத் தூண் தென்பட்டுள்ளது.

அமெரிக்காவின் உடா பாலைவனத்தில் முதலில் கடந்த மாதம் தூண் தென்பட்டது. பின்னர் திடீரென அந்தத் தூண் மாயமானது. அதை வைத்தது யார், எடுத்து சென்றவர்கள் யார் எனத் தெரியாதமையால், வேற்றுக்கிரக வாசிகளுக்கு தொடர்பிருக்குமோ என விவாதம் நடத்தப்பட்டது.



இருப்பினும், பிரிட்டன், ருமேனியா, நெதர்லாந்திலும் அத்தூண் திடீரென தென்பட்டது. இந்நிலையில் வார்சாவிலுள்ள விஸ்டுலா நதிக் கரையோரம் மணல் பரப்பில் 10 அடி உயர தூணை நடைபயிற்சியில் ஈடுபட்டோர் கண்டுள்ளனர். அந்த தூணை வைத்ததும் யார் என இதுவரை தெரியவில்லை.

# ஆல்ப்ஸ் பனிமலையில் இயற்கையான பனிக்குகை.!



சுவிட்சர்லாந்து நாட்டின் ஆல்ப்ஸ் பனி மலையில் இயற்கையாக உருவாகி உள்ள பனிக்குகை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த பனிக்குகை 5 மீற்றர் உயரமும் 20 மீற்றர் நீளமும் உடையதாகும். 'த மைல்' என்று அழைக்கப்படும் இந்த பனிக்குகை, வடிதலால் உருவானதாகும். அதாவது கோடை மற்றும் வசந்த காலத்தில் இந்த குகை பனியில் இருக்கும் நீரால் நிரம்பும்.

பின்னர் இலையுதிர் காலத்தில் இந்த நீர் வடிந்தோடி விடுவதால் பனிக்குகை உருவாகிறது. சுற்றிலும் வெண்பனியால் சூழப்பட்ட இந்த இயற்கை பனிக்குகை காண்போர் மனதைக் கொள்ளை கொள்வதாய் உள்ளது.

## ஆஸ்திரேலியாவில் கொரோனா தடுப்பூசி பரிசோதனை நிறுத்தம்?

ஆஸ்திரேலியாவில் கொரோனா தடுப்பூசி சோதனையின்போது, எச்.ஐ.வி. பொசிடிவ் என போலியான முடிவுகள் காண்பித்தமையால் பரிசோதனை நிறுத்தப்பட்டுள்ளது.

குயின்ஸ்லாந்து பல்கலைக் கழகம் மற்றும் சிஎஸ்எல் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள தடுப்பூசியின் முதற்கட்ட சோதனை 216 பேரிடம் நடத்தப்பட்டது. இந்த தடுப்பு மருந்தில் பயன்படுத்தப்பட்ட ஆண்டிபாடிஸ், எச்.ஐ.வி. வைரஸ் நோயறிதலில் தோன்றும் விளைவுகளை ஏற்படுத்தியமையால் 4 இல் ஒருவருக்கு எச்.ஐ.வி. பொசிடிவ் என போலியான முடிவுகளைக் காட்டியது.

இதனால் 2 ஆவது மற்றும் 3 ஆவது கட்ட சோதனைகளை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன எனப் பிரதமர் ஸ்காட் மாரிஸன் தெரிவித்துள்ளார்.


இலங்கை தமிழ் சங்கம் USA
Thamilar Sangamam - 2020
Worldwide Broadcast : Dec. 12& 13, 2020
YouTube
Live Link (Active Dec. 12, 8 am) www.sangam.org
www.sangamEvents.org ( Backup)

| Date (USA) | நிகழ்ச்சி நிரல் | அமெ. கிழக்கு | ஐரோப்பா | இலங்கை/ இந்தியா | தென் ஆபிரிக்கா | மலேசியா |
|---|---|---|---|---|---|---|
| Saturday 2020 - 12 - 12 (USA) | யூ டியூப்/ முகப் புத்தகம் ஆரம்பம் | 8am | 1pm | 6.30pm | 3pm | 9pm |
| | வரவேற்பு நடனம்/ இசை மலேசியா : இயல் இசை நாடகம் | 9am | 2pm | 7.30pm | 4pm | 10pm |
| | சீமான் பேச்சு முன்னோட்டம் நடனம்: 'முத்தைத் தரு பக்தி' உலகளாவிய நிகழ்வு | 10am | 3pm | 8.30pm | 5pm | 11pm |
| | மெல்லிசை கணேஷ் கிருபா - GK பாடகர்கள் அறிமுகப் பிரிவு | 11am | 4pm | 9.30pm | 6pm | 12midn |
| | இசையுடன் ஒரு மணி நேர இடைவேளை | | | | | |
| | உலகளாவிய நிகழ்வுகள் தெ.ஆபிரிக்கா. நோர்வே. பிரான்ஸ்.பிரிட்டன். அமெரிக்கா (TBD) | 2pm | 7pm | 12.30pm | 9pm | 3am |
| | அலைகள் : உலகளாவிய இசை அரங்கில் தமிழ் இசைக் கலைஞர்கள். பேர்ள் | 4pm | 9pm | 2.30am | 11pm | 5am |
| | அமெரிக்க நடனங்களும் தமிழ் பாடசாலைகளும் | 5pm | 10pm | 3.30am | 12midn | 6am |
| | கனடா: நடனம்/ இசை தேர்ந்த கருப்பொருள்களின் மறு ஒலிபரப்பு | 6pm | 11pm | 4.30am | 1am | 7am |
| | புளோரிடா - வயலின் (பாரம்பரியம்) நடனம்: 'தீராத விளையாட்டு' | 8pm | 1am | 6.30am | 3am | 9am |
| | கணேஷ் கிருபாவின் ஈழ. தத்துவப் பாடல்கள் | 9pm | 3am | 7.30am | 5am | 10am |

Saturday Program Ends. Rebroadcast for Asia Viewers
Secretary@sangam.org
Phone: (011) - 732 - 743 - 5468


# சாரதி இன்றி இயங்கும் தானியங்கிக் கார்கள்!

## பெய்ஜிங்கில் சோதனையில்



சீன தலைநகர் பெய்ஜிங்கில் சாரதி இல்லாமல் இயங்கும் தானியங்கி கார்கள், வீதிகளில் இயக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டன.

முதற்கட்டமாக 5 கார்களை இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், 30 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்குக் கார்களை இயக்கி பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்ய உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து நெரிசலுக்கு ஏற்ப தானாகவே வேகத்தை மாற்றி அமைத்துக்கொள்ளும் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த கார்களில், சாலை விதிகளை பின்பற்றும் வகையில் சென்சர்கள் இணைக்கப்பட்டுள்ளன.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1987.11.13
மதம் - இந்து V
நட்சத்திரம் - ஆயிலியம்
செவ் - 08இல்
பாவம் - 20
கல்வி - MBBS
தொழில் - MBBS Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.12.21
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 19 1/4
சூ/ செவ் - 4இல்
கல்வி - CIMA
தொழில் - கணக்காளர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528


## கொரோனா தடுப்பு மருந்தை வாங்கிக் குவிக்கும் நாடுகள்!

அமெரிக்காவின் டியூக் பல்கலைக் கழகக் குழுவினர் கொரோனா தடுப்பு மருந்து வாங்குவதில் பணக்கார நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் உள்ள இடைவெளி குறித்த ஓர் ஆய்வை நடத்தியுள்ளனர். அதில் பணக்கார நாடுகள் தங்கள் ஒட்டு மொத்த மக்களுக்கும் பலமுறை செலுத்தத் தேவையான அளவு கொரோனா தடுப்பு மருந்தை வாங்க முற்பதிவு செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இது வரை முந்நூறு கோடி முறை செலுத்தும் அளவுக்குத் தடுப்பு மருந்தைக் கொள்முதல் செய்ய முன்கூட்டி முற்பதிவு கொடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால் ஏழை நாடுகளின் மக்களுக்குத் தடுப்பு மருந்து கிடைப்பதற்கான வாய்ப்பு குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளன.

# முண்டாசுக் கவிஞன் மகாகவி பாரதியின் பிறந்தநாள் இன்று...



விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக் கவியாகப் போற்றப்படுகிறார். தன்னுடைய தாய்நாட்டை நினைந்து பெருமை கொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என தமிழ் மொழியை போற்றிப்பாடிய மகாகவி பாரதியாரின் பிறந்தநாள் இன்று.

சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி டிசெம்பர் 11 ஆம் திகதி 1882 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரைப் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர்.

தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனை மெச்சி, பாரதி என்ற பட்டம் வழங்கினார்.

பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

சின்னசாமி ஐயர் - லக்ஷ்மி அம்மாள் தம்பதியினருக்கு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார்.

தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897 ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார். 1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் எட்டயபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சில காலத்திலேயே, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார்.

1904 ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

பாரதி, தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்.

தம் தாய்மொழி தமிழின் மீது அளவுகடந்த அன்பு கொண்டவர் பாரதியார். இவர் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' எனக் கவிபுனைந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியை பாரத தேவியாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் பாஞ்சாலி சபதம். பாஞ்சாலி சபதம் வியாசரின் பாரதத்தை தழுவி எழுதப் பெற்றது.

பாரதியார், முதலில் நவம்பர் 1904 முதல் 1906 வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியதோடு தம் வாழ்நாளின் இறுதியிலும் ஆகஸ்ட் 1920 முதல் செப்டம்பர் 1920 வரை அவ்விதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி மறைந்தார்.

சக்கரவர்த்தினி என்ற மகளிர் மாத இதழிலும் (ஆக. 1905 ஆக. 1906), இந்தியா என்ற வார இதழில் (மே 1905 மார்.1906 /செப். 1906, புதுச்சேரி: 10.19.1908 17 மே 1910), சூரியோதயம் (1910), கர்மயோகி (டிசெம்பர் 1909 1910), தர்மம் (பெப்.1910) என்ற இதழ்களிலும் பாலபாரத யங் இண்டியா என்ற ஆங்கில இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பாரதியாரின் பாடல்களை பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த பர்மா மாகாண அரசு தடைசெய்தது. இதனைப் பின்பற்றி சென்னை மாகாணத்தின் காவல் துறை உத்தரவு மூலம் பாரதியார் பாடல்கள் தடைசெய்யப்பட்டு புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தீரர் சத்திய மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த விவாதத்தில் இலக்கியம் சார்ந்த பல கருத்துகள் பதிவாகின.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக் கவியாகப் போற்றப்படுகிறார்.

தன்னுடைய தாய்நாட்டை நினைந்து பெருமை கொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர். வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம் என்றவர்.

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத்திருநாட்டில் மண்ணடிமைதீருதல் முயற்கொம்பே எனப் பெண்ணுரிமையை ஏத்தினார். போற்றி போற்றியோராயிரம் போற்றி நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகான் என்ற பாரதி பெண்மை வாழ்கவெனக் கூத்திடுவோமடா என்றார். பெண்களின் கல்வியறிவுக்காகச் சட்டங்களைச் செய்திடவும் கனவு கண்ட பாரதி, சாதனை படைக்க மட்டுமல்லாது தெய்வச் சாதிபடைக்கவும் பெண்கள் தகுதிபடைத்தவர்கள் என்று கண்டார்.

தமிழ்நாடு அரசு மகாகவி பாரதியார் நினைவினைப் போற்றும் வகையில் பாரதியார் நினைவுச் சின்னங்களாக எட்டயபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம், சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம், புதுச்சேரியில் அவர் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை நினைவு இல்லங்களாகப் போற்றி வருகிறது.

1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டார். கோவில் யானையால் தாக்கப்பட்ட சில நாகளுக்குப் பிறகு, கடும் வயிற்றுக்கடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார். பிறகு 1921 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 12 அவர் காலமானார்.







மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 138 வது பிறந்த தின நினைவு நிகழ்வு யாழில் இன்று இடம் பெற்றது.

யாழில் உள்ள இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தில் ஏற்பாட்டில் நல்லூர் ஆலயத்திற்கு பின்பக்க வீதியிலுள்ள பாரதியார் நினைவுச் சிலை அடியில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பாரதியார் நினைவுச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பாரதியார் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் பாரதியாருக்கு மலர்மாலை அணிவித்தனர்.

இதன் பின்னர் பாரதியாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.எஸ். சிவஞானம் யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆர்னால்ட் முன் னாள் மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன் சிவாஜிலிங்கம் அனந்தி சசிதரன் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உள்நாட்டு கொரோனா மருந்து சாத்தியம் என்றால் மக்களுக்கு அறிவிப்போம்; விழிப்புடன் இருங்கள்!

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

கேகாலை மாவட்ட மக்கள், பெற்றுக்கொள்ள முண்டியடித்த மருந்து தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படாமலுள்ள, இது போன்ற மருந்துகளை உட்கொள்ள முன்னர் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கொவிட் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் நபரொருவரால் தயாரிக்கப்பட்ட கை மருந்தொன்றை பெற்றுக் கொள்வதற்கு பிரதேச மக்கள் முண்டியடித்தமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கேகாலை மாவட்டமே தற்போது அபாய நிலைமையில் உள்ளது. பொலிஸார் இதற்கான உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். இந்தப் பகுதியிலுள்ள மக்கள் அபாயத்தைத் தாமாக தேடிக் கொண்டுள்ளனர்.

இந்த மருந்து இன்னும் விஞ்ஞான ரீதியாக நிரூபனமாகவில்லை. அது தொடர்பான ஆய்வுகள் இன்னும் ஆய்வு மட்டத்திலேயே உள்ளன.

அந்த ஆய்வில் சாதகமான முடிவு கிடைத்தால் அதனை அரசாங்கமே பொது மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்.

அதுவரை மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும். கொவிட் தடுப்புக்கான எந்தவொரு மருந்து கண்டுபிடிக்கப்பட்டாலும் அது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டும்.

ஆனால், இது வரையில் இந்த மருந்து அவ்வாறு விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, இதுபோன்ற மருந்துகளை உட்கொள்ள முன்னர் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

காரணம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் இதுபோன்ற விடயங்கள் மக்களின் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

கொவிட் தடுப்பிற்கு பயன்படுத்த முடியும் என்று கூறப்படும். ஆயுர்வேத மருந்துகள் தொடர்பில் ஆராய்வதற்கு நாம் ஏற்கனவே குழுவொன்றை நியமித்துள்ளோம்.

அந்தக் குழுவில் இந்த மருந்து தொடர்பில் ஆராயப்படும். அந்த குழுவின் ஆய்வு இன்னும் முடியவில்லை.

எனவே, தற்போது இந்த மருந்து கொவிட் தொற்றை குணப்படுத்தும் என்று எம்மால் கூற முடியாது. ஆகவே சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். - என்றார்.

# மன்னாரில் தவறான சிகிச்சை; நடவடிக்கை ஏதுமில்லையாம்!

(ந.லோகதயாளன்)

மன்னார் ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டு ஜனவரி 08ஆம் திகதி பதினொரு வயதுச் சிறுவன் ஒருவனுக்கு தவறான ஊசி வழங்கிப் பிழையான சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு உண்மைதான் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால், இது தொடர்பான விசாரணை அறிக்கை மறைக்கப்பட்டு, நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் 2019.01.08 அன்று ஒரு நோயாளிக்கு தெரிந்து கொண்டே தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதான செய்தி அப்போது ஊடகங்களில் வெளிவந்தது.

அவ்வாறு வெளி வந்த செய்தி தொடர்பில் வைத்தியசாலையின் மேலதிக பணிப்பாளர் ஒஸ்மன் ரெனி, வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் மகனட் ஜேசுதாஸ் ரோய், தாதிய பரிபாலகர் வெனிற்றோ குரூஸ் உள்ளிட்ட ஐவர் ஆரம்ப விசாரணைகளை 2019 ஜனவரியில் இருந்து மேற்கொண்டனர்.

இவ்வாறு விசாரணை மேற்கொண்ட குழு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டது உண்மை எனப் பரிந்துரைத்ததோடு அந்தக் குழுவும் தனது பரிந்துரையில் இவ்விடயம் வெளித் தெரிந்தால் அரசிற்கு அபகீர்த்தி என்று குறிப்பிட்டுள்ளனரே அன்றி பாதிக்கப்பட்ட 11 வயதுச் சிறுவன் தொடர்பில் கரிசனை ஏதும் காட்டவில்லை.

மேற்படி பரிந்துரையில் தாதியரை இடமாற்றுவதோடு குற்றப்பணம் உள்ளிட்டவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் அதே தாதியர் இன்றும் மன்னார் வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார்.

அதே நேரம் இந்த விசாரணை அறிக்கை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் மறைக்கப்பட்டுள்ளமையோடு மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கு அந்த அறிக்கை அனுப்பப்படாமல் முடக்கப்பட்டுவிட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவராக மஹிந்த தேசப்பிரிய!



கொழும்பு, டிசெ. 11

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் புதிய தவிசாளராக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக 37 ஆண்டுகள் இருந்த மஹிந்த தேசப்பிரியவின் பதவிக்காலம் கடந்த நவம்பர் 13 ஆம் திகதி முடிவுக்கு வந்த நிலையில் தற்போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு, கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதியன்று இலங்கை ஜனநாயகசோசலிசக்குடியரசின் அரசமைப்பின் 41 பி மற்றும் 95/1 பிரிவுகளின்கீழ் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையகத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அதிகாரபூர்வமாகத் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

தேர்தல்கள் அணைக்குழுவுக்குப் புதிய தலைவராக சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய உறுப்பினர்களாக எம்.எம். மொஹமட், எஸ்.பீ.திவாரத்ன, கே.பி.பி.பதிரண மற்றும் ஜீவன் தியாகராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு தொற்றுநோய் வைத்தியசாலையிலிருந்து 20 தொற்றாளர்கள் குணமடைந்து வீடு திரும்பினர்!

வடமாகாண தொற்று நோய்க்கான வைத்தியசாலையிலிருந்து 20 நோயாளர்கள் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் வடமாகாண தொற்று நோய் வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது அங்கு, சுமார் 100 இற்கு மேற்பட்ட கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இந்நிலையில், அந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 20 பேருக்கு இறுதியாக எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வைரஸ் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க வட்டிலப்பம் பொதிகளுடன் சென்ற ரிஸ்வி முப்தி!

கொழும்பு, டிசெ. 11

ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியமளிக்க, கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவுக்கு சென்ற அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி மற்றும் அவரது குழுவினர், ஆணைக்குழுவுக்கு பல பரிசுப் பொதிகளை எடுத்து சென்றமையை அவதானிக்க முடிந்தது.

சுமார் 20 பொதிகள் இவ்வாறு எடுத்து செல்லப்பட்டமையுடன் அதில் 12 பொதிகள் ஆணைக்குழுவின் சாட்சிவிசாரணை இடம்பெறும் மண்டபத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டமையுடன் ஏனையவை, ஆணைக்குழுவுன் ஆணையாளர்கள் மற்றும் அதிகாரிகளின் அலுவலகம் அமைந்துள்ள பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

அந்த பொதிகளில் பலவற்றை ஆணைக் குழுவின் சேவையாளர்கள் சிலரும் இணைந்து ஆணைக் குழுவுக்குள் அந்த பொதிகளை எடுத்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் அந்த பொதிகளில் 'வட்டிலப்பம்' இருந்ததாக பின்னர் அறிய முடிந்தது.

நீதிமன்றத்துக்கு சமமான கௌரவத்துடன் இடம்பெறும் சாட்சி விசாரணை இடம்பெறும் இடத்துக்குள் சாட்சியாளர் ஒருவர் இவ்வாறு வட்டிலப்பம் எடுத்து சென்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வழமையாக ஆணைக் குழுவுக்குள் செல்லும் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் அண்மைக்காலமாக கொவிட் நிலைமை காரணமாக அந்த நிலைமையில் சில தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த வட்டிலப்பம் பொதிகளை எடுத்து செல்லும் போது ஆணைக் குழுவின் சேவையாளர்களும் தொடர்புபட்டிருந்தமையால் எந்த பரிசோதனைகளும் இன்றி அவை உள்ளே எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்தப் பொதிகளை சோதனை செய்ததாகவும், அதில் வட்டிலப்பம் இருந்தமை உறுதியான நிலையில், ஏனைய நாள்களிலும் ஆணைக் குழுவின் சேவை யில் உள்ளவர்கள் உணவுகளை உள்ளே எடுத்துச்செல்வதால், இதன்போதும் சேவையாளர்களும் சேர்ந்து எடுத்துச் சென்றதாலும் அதனைத் தடுக்கவில்லை என பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பின்னர், அந்த பொதிகள் திருப்பி அனுப்பட்டன என ஆணைக் குழுவின் ஊழியர் ஒருவர் தெரிவித்த போதும், அவை திருப்பி எடுத்துச் சென்றமையை காணவில்லை என அங்கு இருந்தவர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே பொதுபலசேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரின் சாட்சியத்தை ஒலிப்பதிவு செய்ய அப்போது உலமா சபையின் பொதுச் செயலர் தொலைபேசியை எடுத்துச் சென்றமை பெறும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே இப்போது வட்டிலப்பம் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அன்றைய தினம் மாலைவரை ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு, எந்த உத்தியோகபூர்வ அறிவித்தல்களையும் வெளியிடவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2020 இல் வெளியிடப்பெற்றது.